**OS.No.93/2025, Dated 17.06.2026**

The witness sworn under Oaths Act 1969 on this the day of 17th day of June 2026.

**வா.சா.1 – பொன்னன் த/பெ சின்னக்கண்ணு பிள்ளை வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

பிரதிவாதி எனக்கு பணத்தை திருப்பி கொடுக்கவேண்டும் என்று கூறி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி கடன் வாங்கி 3 வருடங்கள் ஆகிவிட்டன. எந்த தேதியில் கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியவில்லை. நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். எனக்கு வருடம் ரூ.1,00,000/– வருமானம் வரும். பயிர் வைப்பதற்கு ரூ.30,000/– வரை செலவாகும். எனக்கு மாதம் வீட்டு செலவு ரூ.1000/– தான் செலவாகும். பிரதிவாதி என்னிடம் ரூ.1,20,000/– கடன் கேட்டு 3 வருடங்கள் ஆகின்றது. கடன் கேட்ட உடன் கொடுத்தேனா என்றால் அவர் கடன் கேட்டு சுமார் 20 நாட்கள் கழித்து கடன் கொடுத்தேன். நான் நெல் போட்டு வீட்டில் பணம் வைத்திருந்தேன். நான் ரூ.1,20,000/– க்கு நெல் போட்டேன். கடன் கொடுத்த தேதியில் என்னுடைய வங்கி கணக்கில் அந்த பணம் இருந்ததற்கான குறிப்பு உள்ளது. தேவைப்பட்டால் அந்த வங்கி கணக்கு புத்தகத்தை நான் தாக்கல் செய்கிறேன். நான் 55 மூட்டைகள் நெல் போட்டேன். ஒரு மூட்டை ரூ.1700/– என்று எடுத்தார்கள். நான் சொல்லும் கணக்குப்படி ரூ.1,20,000/– கணக்கு வரவில்லை என்றால் அதற்கு என்னிடம் ரசீது உள்ளது. பிரதிவாதியே கடனுறுதி சீட்டை கைப்பட எழுதினார். முருகன் அந்த பாண்டை எழுதிவந்து கொடுத்தார் நான் பணத்தை கடனாக கொடுத்தேன். கடனுறுதி சீட்டை முருகனின் கடையில் வைத்து எழுதினார்கள். தனபால் என்பவர் எழுதினார். எவ்வளவு நேரம் எழுதினார்கள் என்றால் சுமார் 1/4 மணி நேரம் எழுதினார்கள். அதில் 2 பைசா வட்டி என்று எழுதப்பட்டுள்ளது. பிரதிவாதி கடை வைக்கவேண்டும் என்று என்னிடம் கடன் கேட்டார். பாண்டில் பிரதிவாதி கையெழுத்து போட்ட பின்னிட்டு தான் நான் பணம் கொடுத்தேன். கடனுறுதி சீட்டை எழுதிய உடன் முருகன் அதில் கையொப்பம் போட்டார். அதன்

பின்னிட்டு அவரது மருமகள் கையொப்பம் போட்டார் அவரது பெயர் எனக்கு சரியாக தெரியவில்லை. செல்வி என்று அவரை அழைப்போம். அதன் பின்னிட்டு எனது மனைவி முனியம்மாள் கையொப்பம் போட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.06.17 17:44:09 +0530

சார்புநீதிபதி

வந்தவாசி